**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண். 53/2019**

**07.02.2025**

**வா.சா.2 மார்கபந்து த/பெ. சீனிவாசன்**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை -**

வாதி எனது தங்கை. வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா ஆ2, வா.சா.ஆ 4. ஆவணங்கள் ஆனது நான் புகார் அளித்து அதன் பேரில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வாதிக்காக நான் புகார் கொடுத்திருந்தேன். மேற்படி புகாரில் என்னுடைய வசிப்பிட முகவரியாக எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஜெயின் கோவில் முகவரியை கொடுத்தேனா அல்லது திருவத்தூர் முகவரியை கொடுத்தேனா எனக்கு ஞாபகம் இல்லை. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எந்த முகவரியை கொடுத்துள்ளேன் என்றால் கிழக்கு மாட வீதி முகவரியை கொடுத்துள்ளேன். நானோ அல்லது வாதியோ தாவா சொத்து உள்ள முகவரியில் தற்போது வசிக்கவில்லை என்றால் முன்பு வசித்தேன் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்புவரை அந்த முகவரியில் வசித்தோம் என்றால் 2003, 2004 வரை வசித்தோம். வாதி எப்போது பட்டா வாங்கினார் என்றால் 13.07.2000த்தில் வாங்கினார். அவ்வாறு பட்டா பெற்றும் வாதி தாவா சொத்தை சுவாதீனமே எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பெறப்பட்ட ஆவணத்தில் வாதி வீடு கட்டியிருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அவ்வாறு தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். வாதி வீடு கட்டியிருந்தார். நானும் வாதியும் வாதியின் கணவரும் காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு எங்களது இடத்தை அபகரித்து விட்டதாக குறிப்பிட்டு புகார் கொடுத்தோம் என்றாலும் அதன்பேரில் எந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அழைத்து விசரித்தார்கள் அங்கு அவர்கள் எங்களை பேசவே விடவில்லை. காவல் துறை மீது அபாண்டமாக பொய் கூறுகிறேன் என்றாலும் எங்கள் பெயருக்கு பட்டா வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. ( **கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**